ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஜோஷி என்பவரைப்பார்த்து தோஷி என்பவர் கேட்கிறார். புது நாகரீகப்பிரவாஹமும், சீர்திருத்தமும் நாடெங்கும் சிரிக்கொண்டு கரைபுரண்டுவருகையில் தங்களைப்போன்ற சிலர் கர்னாடகப்பேச்சையே பிடிவாதமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்களே! அது கிஞ்சித்தேனும் பயன்படுமா?

ஜோஷி:— பயனையெதிர்பார்த்து நாங்கள் காரியத்தைச் செய்யவில்லை. கடமையென்றே செய்துவருகிறோம். "பயனை விரும்பாதே, வேலையைச்செய்" என்றே கண்ணனும் கட்டளையிட்டிருக்கின்றார். பிரமாணபூர்வமாகப் பேசுகிறோமேயன்றி பிடிவாதமாக எப்பேச்சும் பேசுவது இல்லை. 'காரியாகாரியவியவஸ்தையில் சாஸ்திரந்தானுனக்குப்பிரமாண'மெனக் கண்ணனிட்ட கட்டளையைமீறி சாஸ்திரத்தைப் புறக்கணித்த உன்னைப்போலுள்ளவர்களல்லவா பிடிவாதமாகப் பேசிவருகிறார்கள்.

தோஷி:— சாஸ்திரவிதிப்படி எல்லோரும் நடந்துவருகிறார்களோ? சாஸ்திரம் சாஸ்திரமென்று சொல்லுவதுமாத்திரமேயொழிய சாஸ்திரப்படி யாரும் நடக்கவில்லையே?

ஜோஷி:— எல்லோரையும் பார்த்துவிட்டாயோ? வேதத்தைவிட்டு வேறுவழியில் எல்லோரும் பிரவர்த்தித்துவிட்டார்களா? ஏதோ சிலர் வயிறுவளர்ப்பதற்காக வேறு வழியை நாடியிருந்தாலும் அவர்கள்தானா பிரபஞ்சமுழுமையுமாய்விட்டார்கள். நகரங்களிலுள்ள சிலரைப் பார்த்துவிட்டு பிரமைகொண்டாய்போலும். கிராமாந்தரங்களில் கணக்கிலடங்காத சிஷ்டர்கள் சரியான சாஸ்திரவிதிப்படியே தர்மங்களை நடத்திவருகிறார்கள். அங்கு சென்று பார்த்தால் உனக்குப் புலப்படும். நகரவாஸிகளும் அடியோடு சாஸ்திரவிதியை விட்டுவிட்டார்களென்று சொல்லுவதற்கில்லை. அவர்களும் சிராத்தாதிகிரியைகளை நடத்திவருகிறார்கள். சிராத்தாதிகள் நடத்துவது சாஸ்திரநம்பிக்கையாற்றான். அப்படியிருக்க விவாஹாதிவிஷயத்தில் அதை நம்பாமலிருப்பதும் லௌகிகஸௌகரியங்களை உத்தேசிப்பதும் ஸரியல்ல.

தோஷி:— சாஸ்திரத்திலும் பாலிகாவிவாஹத்தடை செய்யப்பட்டிருக்கிறதாமே?

ஜோஷி:— இப்படி யாரப்பா சொன்னார்? அந்த சாஸ்திரம் எதென்று கேட்டாயா? எதையாவது ஒன்றைச் சொல்லிவிட்டு இதுதான் அது என்று சொல்லிவிடுவார்கள். அதை நம்பிவிடாதே. அதற்குத் தாத்பர்யமப்படித்தானாவென்று விசாரித்துத்தீர்மானிக்கவேண்டும். இதைப்பற்றி பல விசாரங்கள் செய்து மீமாம்ஸாந்யாயங்களைக்கொண்டு பாலிகாவிவாஹந்தான் தார்ம்மியமான விவாஹமென்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதைப் பார்.

சுபம்.! பத்திராதிபர்,

514


# ஆர்யதர்மம்.

சுக்ல-ஹூ ஐப்பசி-மீ உஉ


## ஸந்தேஹம் ஸரியல்ல,

விவாஹ மசோதா சட்டமாய்விட்டதிலிருந்து சிலருக்குச் சந்தேஹமொன்றிருப்பதுபோல் சிலர் பேசிக்கொள்ளுகிறார்கள். அதாவது—ராஜாங்கத்தில் சட்டமாய்விட்டதைமீறி பாலிகாவிவாஹம்செய்வதே சாஸ்திரப்படிக்குள்ள நமது கடமையென்று அதை நடத்துவோமானால் காராகிருஹவாஸம் செய்யநேரிடுமே. அது பாபமென்று சொல்லப்படுகிறதே, பிரத்யக்ஷமாய் கர்மநாசமும், அபோஜ்ய(சாப்பிடத்தகாததின்) போஜனமும், அகார்யகரணமும் ஆகிய பலதோஷங்களும் ஸம்பவிக்கின்றனவே. அதைவிட பிரௌடாவிவாஹம் செய்வது நல்லதா? அல்லது காராகிருஹவாஸம் நல்லதா? என்று. இந்த சந்தேகம் சரியல்ல? இந்த ஸந்தேகத்தால் ஒருகார்யமும் நிச்சயிக்கமுடியாது. ஆனால் இந்த ஸம்சயத்தின் இருகோடிகளிலும் ஸாதகபாதகங்களை விசாரித்து எது இஹத்திற்கும் பரத்திற்கும் பாதகமில்லாததாகவிருக்குமோ அந்த ஒன்றை முதலாவது தீர்மானிக்கவேண்டும். அப்படித்தீர்மானிப்பது ஓட்டுமூலம் கூடாது. ஆனால் சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யவேண்டும். அப்பொழுது மற்றொரு ஸம்சயம் கிளம்புகிறது. பரமேசுவரனது ஆக்ஞையை மீறுவது ஸரியா? அல்லது விபரீதமதமுள்ள ராஜாங்கத்தாரின் சட்டத்தைமீறுவது ஸரியா? என்று. இதையும் ஓட்டுக்குவிட்டுத் தீர்மானித்துவிடுவோமென்பது கூடாது. ஆனால் அதில் நமது சாஸ்திரத்தையும், அதை அனுஸரித்த பூர்விக ஆசாரத்தையும் விசாரித்துத்தான் தீர்மானிக்கவேண்டும். அப்படி விசாரிக்கும்போது நமது முன்னோர்கள் பரமேசுவரனது ஆக்ஞையை மீறிநடப்பது முற்றிலுந்தவறென்று நிச்சயித்து விபரீதமதமுள்ள ராஜாக்ஞையைத்தான் மீறி நடந்திருக்கிறார்கள். வேனன், கார்த்தவீர்யார்ஜுனன் இவர்கள் சரித்திரமே இதற்கு ஆதாரம். இம்மாதிரி காரியங்களில் உலகத்தோடு

ஒத்திருப்பது உசிதமேயொழிய சாஸ்திரங்களையெல்லாம் பூரவிடுவது ஸரியல்லவென்றால், உலகமென்பது சாஸ்திரங்களை மீறியவர்கள்தானா! வேறொருவருமில்லையா! வேறு சிலரிருந்தால் யாரோடு யார் ஒத்திருக்கவேண்டியது. சாஸ்திரத்தை மீறியவர்களும், அதையனுஸரிப்பவர்களும் பரஸ்பர விரோதபாவனையுடையவர்களாகவே ஒருவரையொருவர் அனுஸரிக்கமுடியாதென்றால், அவரவர்கள் தனித்தனியே அவரவரது இஷ்டம்போல் நடப்பதே ஸரி. ஒருவரை மற்றவர் சீர்திருத்தப்புறப்படவேண்டாம். நமது சாஸ்திரத்தை மீறிச்சட்டமிட்டவர்கள் தங்களது பிரமாண நூலை விட்டுவிடுவார்களா? அதுபோலத்தானே மற்றவரது பிரமாண நூலுமாகும். அவரவர்களது மதத்தைவமும், மதப்பிரமாண நூலும், மதாசாரியாளும், மதாசாரங்களும் இருக்கும்வரை அவைகளைமீறிவிடும்படி பலாத்காரப்படுத்துவது ஸாஹஸமேயாகும். ஆகையால் ஸந்தேஹப்படாமல் ஸதாசாரத்தையே யாவரும் கைக்கொள்வார்களாக,

சுபம்.

பத்திராதிபர்.

---

# புராணவிமர்சம்.

## மகதுபதேசம் மனக்கவலை நீக்கும்மார்க்கம்.

மானிடர்கள் மற்றெல்லாப்பிராணிகளிலும் மேலானதான நுட்பம் வாய்ந்தவர்களென்பது பிரசித்தம். அவர்களின்புத்தி மகான்களின்உபதேசத்தை ஏற்றுக்கொள்வதற்கும் அநுசரித்து நடப்பதற்கும் சாமர்த்தியமுள்ளதாகிறது. எனினும் மனிதரின் தற்கால ஸ்திதியைக்கவனித்தால் மிகபரிதாபமாகவேஇருக்கிறது. மனிதனைமேன்மைப்படுத்துவது சாஸ்திரம். அதைநன்குஅறியவோ அல்லது அறிந்தவர்களின் சொல்லைக்கேட்டு நடக்கவோ செய்வது மனிதனின் கடமையாகும். மனிதன் பெரியோர் சொல்படி கேட்டுநடக்கவேண்டுமேயன்றி, அவர்கள் நடந்ததுபோல நடக்கக்கூடாதென ஓர் நியாயமுண்டு. ஏனெனில் பெரியோர்கள் தங்கள் அநுபவத்தின் குணதோஷங்களை எடுத்துரைத்து சீர்திருத்துவார்கள். நம்மைப்போல பின்னுள்ளவர்கள் கஷ்டமடையக்கூடாதெனக்கருதி தங்களநுபவத்தில் வந்துள்ளகெடுதல்களைக்

காட்டி சரிதம்எழுதிவைத்திருக்கிறார்களேயன்றி அதுஸன்மார்க்கமெனக்கருதி எழுதிவைக்கவில்லை என்பதற்கு "மூத்தோர்சொல் வார்த்தை அமிருதம்." என்பதே ஆதாரமாம். மேலுமவர்கள் செய்கை அமிருதம் என்று சொல்லாததே கூடாதென்பதற்கு சரியான உபதேசமாம். இந்த ரகசியங்களை அறியாதசிலர் விலக்கக்கூடியவைகளை ஆதாரமாகஎண்ணி தாராசாரத்தை தூக்கிவிடுகிறார்கள். இவர்களின்உபதேசம் இதுசமயம் மிகமலிவாய்விட்டது. நமது ஆசாரத்திற்கு ரிஷிகளேஆதாரம். ஆனால் விசுவாமித்திரர் தபோபலமுள்ளவராயினும் தேவஸ்திரீகளின் சேர்க்கையை அடிக்கடி செய்திருப்பதிலிருந்து இதையே ஆதாரமாகவைத்து நடப்போமேஎன்றால் அவர்இரண்டாவது ஸ்வர்க்கமொன்று திரிசங்கு ராஜனுக்கு சிருஷ்டித்தளித்தார். அதைச்செய்ய நாம் சக்திபெறுவோமேயானால் அவரது சகல அநுஷ்டானமும் ஹிதமாகவேயாகும். நீதிஸ்தலத்தில் ஜயம்பெறக்கருதியவன் நீதிமான்களைக் கேட்கவேண்டியது முறையாம்.

ஏனெனில் அவர்கள் நீதியறிந்தவர்கள். அதுபோல மனிதஜன்மம் கடைத்தேற அதன்ரகசியங்களையறிந்து சட்டமாக எழுதிவைத்திருக்கும் ரிஷிகளையே வழிகேட்கவேண்டும். மனிதனுக்கு அதன்றி வேறுவழியில்லை.

தனத்தின் அருமை காடு, மலை சென்று கஷ்டப்பட்டு தேடியவர்களுக்குத் தெரியுமேயல்லாது மற்றவர்களுக்குதெரிய மாட்டாது. அதுபோலவே வேதசாஸ்திரங்களை கையாண்டு அதன் அநுபவஸாரங்களை எழுதிவைத்த ரிஷிகளைக்கேட்டால் அதன் அருமைதெரியவரும். தற்கால நவீனவித்வான்கள் சாத்திரமார்க்கங்களை சீர்திருத்தியமைக்கக்கருதி நூதனமாய் சிலவுபதேசங்களைப்பாமரர்களுக்குப்புகட்டிவருகிறார்கள். இவர்களுடைய உபதேசத்தில் வேதம், சாஸ்திரம் இவைகள் கட்டுக்கதைகளென்பது முக்கியமான ஓர்பாகமாகிறது. இதுஎதுபோலென்றால் செவிடர்களுக்கு ஈசநாமம், சங்கீதசுகம், இவைகளைக்கேட்டு சுகம்பெற முடியாது. இக்காரணத்தால் பகவான் நாமமேயில்லை, சங்கீதமே இல்லை, என்றுசொல்லிவிட்டால் அதுஎவ்வளவு உண்மையாகுமோ அதுபோலவேயாம். நவீனபண்டிதர்களுக்கு சாஸ்திரமார்க்கம் பிடிக்காமலிருக்கக் காரணமென்னவெனில் பித்தநோய் அதிகரித்தவனுக்கு "தேன்பாகு," கசப்பாகவிருக்கும், அது அவர்களின்

நாவின் குற்றமேயன்றி தேன்பாகின் சுவைக்குற்றமல்ல. அது போலவே பிடிக்காததற்கு இவர்களின் ஞானசக்திக்குறைவே யாகும். அஞ்ஞானியொருவன் ஈசனில்லைஎன்றுசொல்லிவிட்டால் அவரில்லாமல் போய்விடுவாரா, இது அஞ்ஞானத்தின் ஆதிக்யமே யாம். ஞானம்பிறக்கும்போது இந்தப்பிராந்தி விலக்காமலிருக்க மாட்டாது ஜலத்தில் கண்ணுக்குத்தெரியாத பரமாணுக்கள் போல பல கிருமிகளுள்ளதை, இல்லையென்று சாதிக்குமொருவன் ஒரு பூதக்கண்ணாடியால் ஜலத்தைப்பார்த்தபிறகு உள்ளதென ஒப்புக்கொள்வதுபோல, அஞ்ஞானியும், அறநூல்களாகின்ற தூர திருஷ்டிக்கண்ணாடியால் ஊனக்கண்களுக்குப்புலப்படாத "கடவுளை," க்காணும்போது நம்பிக்கை கொள்வான்.

குருடனொருவனுக்கு எதிரிலுள்ள மனிதனைப்பார்க்கவியலாதது அவன் கண்ணின்குற்றமேயன்றி எதிரிலுள்ள மனிதனின் குற்றமல்ல. அதுபோல வேதசாஸ்திரங்கள் கட்டுக்கதை என்று அதன் மகாத்மியமறியாமல் சொல்பவர்களுக்கு ஞானக்கண் ஊனமாயிருப்பதே காரணமாம். அறியாத்தனமாகிய ரோகத்தைவிலக்கிக்கொள்ளத்தக்கவழியாக சிகித்ஸைசெய்துகொள்வது முக்கியமாகும். மூளைக்கொதிப்பால்வந்த தலைவலிக்கு, வயற்றில் மருந்து போட்டால் பயன்படமாட்டாது. ரோகத்தின் காரணம்கண்டு சிகிச்சைசெய்யவேணும். அதுபோலவே அறியாத்தனத்தினால் வந்த மனிதனின் அஞ்ஞானரோகத்தை சாஸ்திரமார்க்கமாகிய சிகிச்சையால் விலக்கவேண்டுமேதவிர, முறைதப்பி சாஸ்திரமார்க்கம் கட்டுக்கதையென்று விலக்கிவிட்டால், தலைவலிக்கு வயற்றில் மருந்துபோடுவதுபோல பயனற்றதாகும்.

மஞ்சள்காமாலை ரோகிக்கு, அவனைச்சூழ்ந்துள்ள சகலவஸ்துக்களும் மஞ்சள்நிறமாகவேதோன்றுவது இயல்பானகுணமாகும். இந்தவஸ்துக்கள் நமதுகண்ணின்தோஷத்தால் மஞ்சள் நிறமாகக்காணப்படுகின்றன. அதை அறிந்துகொள்ளாமல், வஸ்த்துக்களுக்குசிகிச்சையைச்செய்தால் மஞ்சள்நிறம்மாறிப்போமோ. தன்குற்றத்தையறிந்து அந்தசிகிச்சையை தன்கண்ணுக்குசெய்துகொண்டால், வஸ்துக்களின் சுபாவநிறம்காணப்படும். அதுபோல சாஸ்திரமார்க்கம் அஹிதமெனத்தோன்றினவனுக்கு காமாலை ரோகம்போலுள்ள அஞ்ஞானமே காரணமாம். அதற்காக சாஸ்திரசித்தாந்தங்களைப் பழிப்பதாலோ, மாற்றிவைப்பதாலோ, ஹித

மடைந்து விடமாட்டான். அசிதமெனத்தோன்றுவது, நமது புத்திஹீனமென்றறிந்து சாஸ்திராப்பியாசத்தின் முறையாய் தெரிந்துகொள்வதே உத்தமமார்க்கமாகும்.

கல்லினைப் பல்லினால் கடித்தால் பல்லுடைந்துவிடுமேயன்றி கல்லுடையாது. அதுபோல துராசாரங்களைக்கொண்டு உண்மையான சதாசாரத்தை நசிக்கச்செய்யமுயல்வதானது ஆத்மநாசத்தையாதரிப்பதேயன்றி வேறில்லை. இம்மாதிரிதுராசாரப் பிரியர்களும், புக்தி, சக்தி, சாமர்த்தியத்தால் அதைநிலைநிறுத்த கருதுகிறவர்களும். "ஹிரண்ணியகசிபு." என்ற அசுரனுக்கொப்பாவார்கள் என்ற தத்துவத்தை ஸ்ரீ பாகவதம் பிரசித்தப்படுத்தி இருக்கிறது.

ஹிரண்ணியகசிபு என்ற அசுரன்தனது தம்பியின்நாசத்தால் விஷ்ணுவிடம் விரோதங்கொண்டு அவரை நிக்கிரகம்செய்யவேண்டுமென்ற துரெண்ணத்தால், தன் தூதர்களுக்கு உபதேசித்ததாவது ஹேதூதர்காள்! மஹாவிஷ்ணு கபடன், எனக்குதற்காலம் சத்துரு. அவர்நாசமடைந்தால் அவரைப்பிராணனாகவுடைய மற்ற தேவர்கள் வேர்அறுபட்ட விருட்சத்தின் கிளைகள்வாடிப்போவது போல வாடிவிடுவார்கள். நீங்கள், பிராம்மண, க்ஷத்திரியர்களால் விருத்தியடைந்த பூமிக்குச்செல்லுங்கள். தவம், யாகம், அத்தியயனம், விருதம், தானம், இவைகளுடையவர்களை நாசம்செய்யுங்கள்என்று உபதேசித்து மிகசாரமான ஓர் ரகசியத்தையும் பின்வருமாறு உபதேசித்தான்.

विष्णोर्द्विजक्रियामूलो यज्ञधर्ममयः पुमान् ।
देवर्षिपितृभूतानां धर्मस्य च परायणम् ॥
यत्र यत्र द्विजा गावो वेदा वर्णाश्रमक्रियाः ।
तं तं जनपदं यात सन्दीपयत पृश्चयत ॥

நாராயணன், வேதியர்களின் அனுஷ்டானத்தைக் காரணமாகவுடையவன், யாகம், தர்மம், இவைகளின் ரூபமானவன். தேவர்கள், ரிஷிகள், பிதுருக்கள் பூதங்கள், தர்மம், இவைகளுக்கு ஆச்ரயமாகியவன். நீங்கள், பிராமணர்களும்,பசுக்களும், வேதங்களும் வர்ணாச்ரமங்களின் அநுஷ்டானங்களும் எங்கெங்கே இருக்கின்றனவோ, அந்தந்ததேசம் செல்லுங்கள். அவற்றைப்பொசுக்கும்

கள், வெட்டுங்கள் என்று ஸர்வேசுரனுகிய விஷ்ணுவின்ஜீவநிலையை இம்மாதிரியென்வெண்ணி உபதேசித்தான். இவ்விரண்ணிய கசிபுவின் உபதேசத்திற்கும் நவீன பண்டிதமனிதர்களின் உபதேசத்திற்கும் என்னவித்தியாசமிருக்கிறது. இவ்வசுரனுல் பலகஷ்ட நஷ்டங்களையடைந்த தேவர்களுக்கு, பகவான் உபதேசித்தருளிச் செய்ததாவது.

ज्ञातमेतस्य दौरात्म्यं दैतेयापशदस्य यत् ।
तस्य शान्तिं करिष्यामि कालस्तावत् प्रतीक्ष्यताम् ॥
यथा वेदेषु देवेषु गोषु विप्रेषु साधुषु ।
धर्मे मयि च विद्वेषस्तदा आशुविनश्यति ॥

அசுராதமனுகிய ஹிரண்ணியகசிபுவின் துஷ்டத்தனத்தை நான் அறிவேன். அதற்கு நிவர்த்திசெய்கிறேன். காலத்தை எதிர்பார்த்திருக்கவேண்டும். காலம்யாதெனில் வேதங்கள், பசுக்கள், தேவர்கள், கோக்கள், பிராமணர்கள், சாதுக்கள், தர்ம்மம், இவைகளிடத்திலும், என்னிடத்திலும் துவேஷம்கொண்டால் அவன் விரைவில் நாசமடைகிருன் என்ருர்.

ஆஸ்த்திகர்களே ! இவ்வசுரனின்செய்கையில் நாசகாரணமாகிய சகலமும் பொருந்தியிருக்கிறது. அதற்குற்றகாலத்தை எதிர்பார்த்திருக்கவேண்டுமென்ற பகவதுபதேசத்திலேஇருந்து தற்கால நாகரீக, துராசார ஆதிக்கியத்தால் மிகக்கவலைகொண்ட ஆஸ்திகர்களுக்கு இவ்வுபதேசமானது எவ்வளவுசமாதானத்தையளிக்கிறது பாருங்கள். இம்மாதிரிமனக்கவலைகளைநீக்கி சுகம்பெறஉபதேசித்துவரும் புராணங்கள் எங்ஙனம்கட்டுக்கதையாகும்.

பகவான் ஏன் காலத்தை எதிர்பார்க்க உபதேசித்தார், அப்பொழுதே சிட்சிக்கக்கூடாதாவெனில், கண்பார்வையிலும் குற்றம் செய்தவனையும் உலகநன்மைக்காகச் சிறிதுகாலத்தில் நன்குவிசாரித்து தக்கபடி தண்டிப்பது உலகவழக்கம். உடன் சிட்சிப்பது உலகதிருப்தியாகமாட்டாது. இதை விளக்கிவைக்கவே பகவான் தேவர்களை கஷ்டம்பொறுத்து காலத்தை எதிர்பார்க்கவுபதேசித்தார். இவ்வுபதேசமே ஆஸ்திகர்களின்மனச்சாந்திக்குத்தக்கஔடதமாகும். சர்வேசுரன் ஆஸ்திகர்களுக்கு கஷ்டத்தைப்பொறுக்கச் சக்தியும், ஈசத்தியானபுத்தியும், பக்தியும் தந்தருள்புரிவாருக.

சுபம். —— K. S. சங்கராமசாஸ்திரி

# தீபாவளிப்பண்டிகை.

சென்ற வருஷம் நாம் இப்பண்டிகையைக் கொண்டாடி விட்டோமென்று இவ்வருஷம் கொண்டாடாமல் இருக்கிறோமா? அதுபோலவே பிரதிவருஷமும் அப்பண்டிகையின் சரித்திரத்தையும் சிரவணம் செய்யவேண்டியது அவசியமாகும். 'தீபாவளி' என்ற பதத்திற்கு 'தீபக்கூட்டம்' எனப்பொருள். ஆகவே அன்று நமது வீடுகளின் திண்ணைகளிலும் கொறடுகளிலும் தீபங்களை வரிசையாக ஏற்றிவைக்கவேண்டும் என ஏற்படுகிறது. ஆனால் நம்மிற் பெரும்பான்மையோர் அவ்விதம் செய்வதில்லை.

இதற்கு 'நரகசதுர்த்தசி' என்ற வேறு பெயரும் உண்டு. முந்தினநாள் இரவில் அநுஷ்டிக்கப்படும் விருந்துக்கு நரகசதுர்த்தசியெனவும், விடியற்காலத்தில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு பிறகு விருந்துண்ணலுக்குத் தீபாவளியென்றும் பாகுபாடு செய்யலாம்.

நரகாஸுரன் இப்பண்டிகைக்குக் காரணமாயிருப்பதால் நரகசதுர்த்தசி என்ற பெயரும் ஏற்றதாகவேயிருக்கிறது. இவ்வஸுரன் பிராக்ஜோதிஷபுரத்துக்கு அரசனாயிருந்தான். அப்பட்டணத்திற்குத் தற்காலம் 'அஸ்ஸாம்' என்ற பெயர் வழங்குகிறதென்பது குறிப்பிடத்தக்கது. அவன் பிரம்மதேவரிடமிருந்து மரணமின்மை முதலிய அரிய வரன்களைப்பெற்றுத் தேவர்களையும் ரிஷிகளையும் கதறஅடித்து 'ரத்னஹாரீச பார்த்திவ:' என்ற நியாயத்தின்படி ஆங்காங்குச் சிறப்புற்று விளங்கும் சிரேஷ்டமான வஸ்துக்களையெல்லாம் தன் பட்டணத்திற் கொண்டுவந்து குவித்தான். அன்னியர்கள் தன் நகரைக் கைப்பற்றாவண்ணம் ஓர் ஆழமான அகழியையும், கடக்கமுடியாத மலையையும், அறுபதினாயிரம் அறுக்கமுடியாத பாசங்களையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தான். அவனுக்குப் பீடன், முரண், நிகும்பன், ஹயக்ரீவன், பஞ்சஜனன் என்ற ஐந்து மந்திரிகளிருந்தனர். இவர்களும் பரமசிவனாரின் வரத்தால் மதோன்மத்தர்களாய் மரணபயமற்றிருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஏழு புத்திரர்களுண்டு. நரகாஸுரன் கவர்ந்த விநோதமான வஸ்துக்களில் நான்கு தந்தங்களுடைய அநேக யானைகளும், வருணனுடைய குடையும் சேர்ந்தவை. இந்தக்

குடைக்கு 'ஆபோகம்' எனப்பெயர் என்றும் நாம் தியானம் செய்துகொண்டு அதனுள்ளே நின்றால் ஜில்ஜிலிக்கும்படியான அமிர்தவர்ஷம் ஏற்படும் என்றும் ஹர்ஷசரித்திரத்திலிருந்து தெரிய வருகிறது. மேலும் அவன் பதினாறாயிரத்து நூறு அழகிய கன்னிகைகளையும் கைது செய்திருந்தான். இவனது உபத்திரவங்களைச் சகியாத இந்திரன் கிருஷ்ணபகவானுக்கு ரிஷிகளைத் தூது அனுப்பி தன்னைக்காத்தருளும்படி வேண்டியபடியால் ஸ்ரீகிருஷ்ண பகவான் ஸத்யபாமையுடன் கருடன்மீதேறி நாகாஸுரனின் பட்டணத்தின்மீது படையெடுத்துச்சென்று வாயவ்யாஸ்திரத்தால் அகழியை உலர்த்திக் கதையினால் மலையைப் பொடியாக்கி முராபாசங்களைத் தன் கத்தியால் அறுத்து உட்சென்றார். மந்திரிமார்களும் அவரது பிள்ளைகளும் எதிர்த்து உயிர்துறந்தனர். அவனுடைய பிரம்மாண்டமான சேனையில் முக்காற்பாகத்தைக் கருடன் தன் பக்ஷங்களினால் நாசம்செய்து பகவானுக்குக் கைங்கரியம் செய்தான். பிறகு நாகாஸுரனுக்கும், பகவானுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அதில் ஸர்வசக்திவாய்ந்த பகவானும் லோபமோகார்த்தரும் அவனுக்கு வரம் கொடுத்த பிரஹ்மாவின் வார்த்தைகளைக் கௌரவிக்கவும் சற்று களைப்புற்றவர்போல் நடித்தார். அச்சமயத்தில் ஸத்யபாமை தானே சார்ங்கதனுஸ்ஸை நாணேற்றி வளைத்து அம்புகளைத் தொடுத்து பகவானுக்கு உதவி புரிந்தாள். இம்மாதிரியே முன்னொருசமயம் சம்பராஸுரயுத்தத்தில் கைகேயி தசரதனுக்கு ஸாரத்யம் செய்து உதவிபுரிந்தது நமது ஞாபகத்திற்கு வருகிறது. கிருஷ்ணர் கடைசியில் அவ்வஸுரன் எறிந்த சதக்னீ என்ற கதையை விழுங்கி அவனைச்சம்ஹரித்து ஸாதுக்களுக்குச் சந்தோஷத்தையுண்டுபண்ணினார். அவன் சாகுந்தருவாயில் தான் இறக்கும் நாள் பண்டிகையாகக் கொண்டாடி வரும்படி வேண்டிக்கொண்டதால் பகவானும் அவனுடைய கோரிக்கையைப் பூர்த்திசெய்தார். அப்பேர்ப்பட்ட கொடிய அஸுரனின் பிரார்த்தனைக்குப் பகவான் என் ஈடுபடவேண்டும்? பகவத்துவேஷிகளின் மரணதினத்தை ஓர் உத்ஸவமாகவே நாம் நடத்திவரவேண்டுமென்பதே கிருஷ்ணரின் உத்தேசமாகையால் அவரும் அதை ஆமோதித்தார்.

பிறகு பகவான் அதிகாலையில் சுமார் 4-மணிக்கு நகாஸுரனின் ஸத்புத்திரனான 'பகதத்தன்' என்பவனுக்கு அவ்விராஜ்யத்

தில் பட்டாபிஷேகம் செய்தார். அப்பட்டாபிஷேகத்திற்கறிகுறி யாகவே நாம் தீபாவளியன்று அதிகாலையில் மங்களஸ்நானம் செய்துவருகிறோம். அன்றையதினம் நல்லெண்ணெயில் மகாலெக்ஷ்மியும், வெந்நீரில் கங்காதேவியும் ஸாந்நித்யம் பெற்றிருக்கின்றனர். ஆகையால் அந்த ஸ்நானத்திற்குக் கங்காஸ்நானபலனுண்டு. இதையநுஸரித்தே நாம் அனைவரும் அன்று நமது இஷ்டமித்திரர்களைச் சந்தித்து 'கங்காஸ்நானம் ஆயிற்றா?' என உற்சாகத்துடன் வினவுகிறோம். மேலும் குருகுலவாஸம் செய்து காசியாத்திரைக்காகப் புறப்பட்ட வரனை நாம் காசியாத்திரை போகாமற் தடுத்து நமது கன்னிகையைத் தானம் செய்துவிடுகிறோம். அவ்விதம் நம்மால் தடுக்கப்பட்ட கங்காஸ்நான பலனையும் மாப்பிள்ளைக்கு உண்டுபண்ணவே நாம் தீபாவளியன்று மாப்பிள்ளைகளை அவசியம் வரவழைத்து மங்களஸ்நானம் செய்துவைக்கிறோம் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர். இப்பண்டிகையின் அவசியம் நவீன ரஸாயனசாஸ்திரத்தின்படியும் வெளியாகும். இப்பண்டிகை சம்பவிக்கும் ஐப்பசிமாதத்தில் உஷ்ணம் குறைவாயும் ஈரமும் சதுசதுப்பும் அதிகமாயுமிருப்பதால் பலவித நோய்க்கிருமிகள் ஆயிரக்கணக்காக உண்டாகிக் காற்றிலும் பாவி நமக்குப் பலவித நோய்களை உண்டுபண்ணுகின்றன. அவைகளைக் கொல்லவே பல வாணங்களும், சீனுவெடிகளும் கொளுத்தப்படுகின்றன. அவைகளினின்று வெளிப்படும் கந்தகப்புகை காற்றிலும் பாவி அக்கிருமிகளைக் கொன்றுவிடுகிறது. கார்த்திகைத் திருநாளில் சொக்கப்பானை கொளுத்தி குங்குலியம் போடுவதாலுண்டாகும் புகையும் கிருமிகளைக் கொல்லும் என ரஸாயனசாஸ்திரிகள் கூறுகிறார்கள். இவ்வாறு கூறுவது நமக்கு அனிஷ்டமல்ல. ஏனெனில் நமது சாஸ்திரங்களும் தாய்தந்தையர்களைவிடப் பன்மடங்கு அதிகமான பிரீதியுடன் நம்முடைய தேகாரோக்கியத்தைக் கருதியே பலவித கர்மங்களையும் பண்டிகைகளையும் விதித்திருக்கின்றன. இதையொட்டியே 'சாஸ்திராய ச ஸ்வாஸ்த்யாய ச' என்ற பழமொழி வழங்கிவருகிறது. ஆகவே சாஸ்திரங்களில் விதிக்கப்படும் கர்மங்களையும் பண்டிகைகளையும் நாம் செவ்வனே அனுஷ்டித்து இம்மை மறுமைப்பயன்களை அடைவோமாக.

குறிப்பு:— ஸ்ரீ வராஹரூபியான விஷ்ணுவுக்கு மூலப்பிரகிருதியின் ஆவேசம் பெற்ற பஞ்சபூதங்களில் ஒன்றான பிருதிவிதேவியிடம் நரகாஸுரன் பிறந்தவன்.

M. ராமராவ்.

# மத்யவர்த்தி.

இப்பெயர்கொண்ட தலையங்கத்துடன் சுதேசமித்திரனில் ஓர் வியாஸம் தொடர்பாய் வந்துகொண்டிருப்பதை அப்பத்திரிகை படிப்போரறிவர். அவர் எழுதுவது இப்போதிய விவாகச் சட்ட விஷயந்தான். இவர் மத்தியவர்த்தியானதால் வாதிப் பிரதிவாதிகளிருவருக்கும் பொதுவாயிருந்து வழக்கைத் தீர்த்துவைக்க வந்திருப்பதாய் அவர் எண்ணம். அதற்காகவே அவர் அன்னை தந்தை இட்ட திருநாமத்தையும் மறைத்துக்கொண்டு மத்தியவர்த்தி என்றே பெயரிட்டுக்கொண்டார். இவர் ஆரம்பத்தில் தான் வைத்துக் கொண்ட பெயரைக் காப்பாற்றுபவர்போல் இவ்விவாக விஷயத்தில் வைதிகர்கள் ப்ரௌடையாவதற்கு முன்னமேதான் விவாகம் செய்யவேண்டுமென்று கூறுகின்றனர். அதன்பிறகு செய்தால் கன்னியும் மணமகனும் ப்ரஷ்டர்களாவரென்றும், அவரது தாய் தந்தையரும் பாபத்துக்குள்ளாவர்களென்றும் உள்ள பிரமாண வசனங்களுடன் வைதிகமதத்தை விளக்கினர். பிறகு மறுசாரார் ப்ரௌடையாய் மூன்று வருடபரியந்தம் விவாகம் செய்யலாம் என்று மனு முதலியாது வசனமிருப்பதால் ப்ரௌடையாகி 3-வருடத்திற்குள் விவாகம் செய்வது கௌணமே தவிர பாபத்தில் சேர்ந்ததில்லையென்று நினைக்கிறார்கள் என்றும் கூறிவிட்டு, பிறகு இருவருக்கும் சமாதானமான ஜட்ஜ்மெண்டு சொல்வதுபோன்ற விடத்தில் பின்மதம் தன் அபிப்ராயமென்பதைச் சற்று வெளிச் சம்போட்டார். அம்மட்டை கவனித்ததும் கும்பகோணத்தில் உள்ள ஓர் பெண்மணி அவரது அபிப்பிராயத்தை யுக்தியுடனும் சாஸ்திரத்துடனும் கண்டித்து அதேமித்திரனில் வெளியிட்டிருந்தார் என்பதையும் பார்த்திருக்கலாம். இப்போது 30—10—29 மித்திரனில் அம்மத்தியவர்த்தி நடுநிலைமை வகிக்காமல் இன்னும் தன்னை நடுநிலைமை வகிப்பவரென்றே நினைத்துக்கொண்டு கும்பகோணத்திலிருந்து எழுதியதைக் கண்டிப்பதுபோல் கொஞ்சம் காட்டிவிட்டு உடனே முழுப்பொய்யில் இறங்கிவிட்டார். அவர் நம் பரமாசார்யாள் 'ஓரிடத்தில் மாந்தர்கள் எவ்விதம் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆசைகள் பலவிதமாய் இருக்கும். ஆகவே வெளியில் ஆசைகொண்டலைதலைத் திருப்பமுடியாது. உள்ளாசை

யை வெளியிலிழுக்கவும் முடியாது. ஆகவே சாஸ்திரம் ஒருவனை யும் தூண்டி இழுக்காது. மற்றுமிருட்டில் வைத்திருக்கும் சாமா னைத்தீபமானது எவ்விதம்காட்டுமோ அவ்விதம் சாஸ்திரம்காட்டு' மென்று எழுதியிருப்பதை எழுதி தனக்குப் பிரௌடா விவாகத் தில் தாத்பரியத்தையும் பின்னால் மாளவ்யாவுடன் சேர்ந்து 12 வயதுக்காவது சம்மதப்பட்டோமா என்றும் இன்னும் பலவாறு வைதிகமதத்திற்கு அதிருப்தியை உண்டுபண்ணியிருக்கிறார். இன் னும் வரும் என்றும் திருத்தியிருக்கிறார். இனி என்னென்ன கூறப்போகிறாரோ தெரியவில்லை. இருக்கட்டும். எழுதினமட்டில் கவனிப்போம். இவ்விதம் நம் பரமாசார்யாளே கூறியிருக்கிறாரே என்கிறார். எந்தவிடத்தில் ஆசார்யாள் கூறினர் என்று அவர் கூறவில்லை. ஆனால் அவரது வாக்கியத்தின் தன்மையைக் கவனித்தால் அடியில்வரும் வாக்கியமாகத்தான் இருக்கலாம். அதனை வெளி யிடுகிறேன்.

பிருஹதாரண்யகம் 2-வது அத்தியாயத்தில்

अनेका हि पुरुषाणामिच्छा रागादयश्च दोषा विचित्राः । ततश्च बाह्यविषयरागाद्यपहृतचेतसो न शास्त्रं निवर्तयितुं शक्तं, नापिस्वभावतो बाह्यविषयविरक्तचेतसोविषयेषु प्रवर्तयितुं शक्तं, किन्तु शास्त्रादेताव- देव भवति । इदमिष्टसाधनम् इदमनिष्टसाधनमिति साध्यसाधन- संबंधविशेषाभिव्यक्तिः प्रदीपादिवत् न तु शास्त्रं भृत्यानिव बला- न्निवर्तयति नियोजयति वा ॥

என்று. இதன் கருத்து முன் எழுதியதே. ஆயினும் மத்யவர்த்தி யாயிருந்துகொண்டு இவர் அஸந்தர்ப்பத்தில் இதைப்பிரயோகித்து விட்டார். நம் பரமாசார்யாள் இவர் நினைக்கும்அர்த்தத்தை வெளி யிட எழுதவில்லை. மற்றுகுருமூலமாய் சாஸ்திரத்தில் பக்திவைத் துக் குரு கூறியபடி நடந்தால் க்ஷேமமடைவாய். சாஸ்திரப்படி நீ நடக்காவிடில் சாஸ்திரம் உன்னைக் கண்டித்துவிடாது. உனக்கு சிநேகிதன்போல ஹிதத்தையும் சொல்லாது. ஆனால் இருட்டில் இன்னபதார்த்தம் இருக்கிறதென்பது தெரியாமலிருக்கும்போது கையில்விளக்கைக் கொடுத்து உனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்என்றுசொன்னால் அவன் தனக்கு வேண்டியதாயும் பிறரும் விரும்புவதாயுமிருப்பதைத்தான் எடுத்துவருவானே தவிர தனக்கு ஆசையென்று உத்தமபதார்த்தங்களைவிட்டு ஓர் ஓரத்தில் மலமிருந்

தால் அதனை எடுத்துவருவானா? அவ்விதம் வந்தால் பார்ப்பவர்கள் பரிஹஸிக்காமலிருப்பார்களா? ஆகவே சாஸ்திரம் நல்லது கெட்டது என்பதைக்காட்டுகிறதென்றால் நல்லதை எடுத்துக்கொள்பவனுக்குத்தான் காட்டும். சாஸ்திரம் அவனிடம்தான் உபயோகமுள்ளதாகும். குருடனுக்குத் தீபம் ஒன்றையும் காட்டாது. ஆகவே மத்தியவர்த்தி எதையோ தடுமாறிக்கூறுகிறார். இவ்விதம் கூறிக் கடைசியிலும் வைதிகமதஸ்தருக்குப் பயத்தையுண்டுபண்ணுவது போல் கூறி முடிக்கிறார். இனி நானோ யாது கூறப்போகிறரோ பார்ப்போம்.

கடைசியில் இதைக்கூறி இன்று முடிக்கிறேன்' மத்யவர்த்தி உண்மையான அனுதாபியாயிருந்தால் தன் பெயரை மறைத்துக் கொள்ளாமல் உண்மைப்பெயரை வெளியிட்டால் உண்மையான மத்யவர்த்தி ஆவர்.

——— M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

## நாசிகேதசயனமும் நிருடபசுபந்தமும்.

ஆஸ்திகர்களே !

இவ்விஷயத்தை எழுதப்புகுமுன் தூலிகை ஓர்புறமும், மனம் ஓர்புறமும் செல்லுகின்றன. ஆனாலும் ஆரம்பித்த விஷயத்தை நிறுத்தவும் இஷ்டமில்லை जितो धर्मो ह्य धर्मेण என்பதாதி வசனங்களால் கலியில் அதர்மத்தால் தர்மமும், பொய்யால் மெய்யும், திருடர்களால் அரசர்களும், பெண்களால் ஆடவர்களும் அடக்கப்பட்டுத் தாழ்ந்துவிடுவார்கள் என்று முன்னமேயே பராசரமுனிவர் கூறியிருப்பதாலும் விஷ்ணுபுராணத்திலும் "வர்ணம், ஆச்ரமம், இவைகளின் ஆசாரத்தில்மனிதர்களுக்குப்ரவிருத்தியுண்டாகமாட்டாது கலியுகத்தில்" என்றும் சொல்லியிருப்பதற்கு அனுகுணமாமாகவே தற்சமயம் "விவாகவயதுமசோதா" ஜயமடையும்தருவாயில் இருக்கவும், ஆங்காங்கு பிராமணர்களிலும் மாங்கல்யமிழந்த மங்கையர் மற்றோர் மணாளனை மணந்திடும் விருத்தாந்தமும் மறையோர் குலத்துதித்தோரும், வைதிகரென்று பெயர்தாங்கினோரும், தர்மநாசத்துக்குப் படும்பாடும், பேசும் விதண்டாவாதமும் வயிற்றுப்பிழைப்பிற்கென்றே யாஜனவிருத்தியை வைத்துக்கொண்டிருப்பவர்களின் மனம்போன போக்கின்படி செய்துவைக்கும் கர்மாக்களின் தாண்டவம், பார்க்கவும், கேட்கவும் ஸகிக்கமுடியாமல்

மனதைப்பிளக்குகின்றன. நாமும் காலத்தைப் பின்பற்றிவிடுவோ மென்றாலும் அதிலும் மனம் பற்றுதலடையப்போகிறதில்லை. ஆகையால் நமக்கேற்பட்ட வைதிகமார்க்கத்தையே கடைப்பிடித்தும், 'शमेन शान्ताश्शिवमाचरन्ति' என்னும் உபநிடதவாக்கியத்தையே சரணமடைந்து உலகத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் மஹான்களின் ஏகாந்த இருப்பை நாமும் பின்பற்றியே இருப்பதுதான் காலோசிதமாய்த் தோன்றுகிறது.

அச்ரத்தையுள்ளவர்கள் இக்காலத்தில் ஒன்றும் முடியாதென்று ஒதுங்கிவிடுவார்களேயொழிய சிரத்தையுள்ள புண்யாத்மாக்கள் இப்பொழுதும் ஸ்வதர்மபரிபாலனம் செய்தே வருகிறார்கள். பிரகிருதத்தில்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளின் பரிபூரண அநுக்கிரஹத்தால் ஸோமயாஜீ பதம் பெற்ற பிர்ம்மஸ்ரீ ரா. ஸா. நடேசதீக்ஷிதர் (டிஸ்டிரிக்ட் முன்ஸீப் கோர்ட் குமாஸ்தா) நாளது பாத்திரபத சுக்லபஞ்சமீ தினத்தில் ஆனந்ததாண்டவமூர்த்தி நடனம்புரியும் சிதம்பரக்ஷேத்திரத்தில் அநேக பிராம்மணர்களுக்கு அன்னதானத்துடனும் ரித்விக்குகள் சந்தோஷமடையும் தக்ஷிணையுடனும் மேற்கண்ட சயனத்துடன் பசுபந்தத்தை நடத்தி ஈச்வரனைக் களிப்பித்தார்.

ஸோமயாகம் செய்தவர்கள் பிரதிவருஷகாலத்திலும் பசுபந்தம் செய்யவேண்டும். தவறினால் வைச்வாநரேஷ்டியாவது செய்யவேண்டும். அவ்விதம் பசுபந்தமே செய்யுங்கால் க்ஷுத்ர சயனங்களான ஸாவித்ரம், நாசிகேதம், சாதுர்ஹோத்திரியம், வைசவஸிருஜம் முதலானவைகளைச் செய்து பசுபந்தம் செய்கிறார்கள்.

## நாசிகேத சயனம்.

வாஜச்சிரவஸமுனிவர் விச்வஜித் யாகத்தில் எல்லாப்பொருளையும் தானம் செய்தார். அதில் பசுமாடுகள் நூற்றுக்கணக்காய்க் கொடுக்கப்பட்டபோதிலும், அவைகள் தண்ணீர் குடிக்கவும் புல்லு மேயவும், பால் கறக்கவும், கன்று போடவும் சக்தியற்றவைகளாயிருந்தன. "அவைகளைக் கொடுப்பதால் பயனில்லை" என்று அறிந்த வாஜச்சிரவஸ்ஸின் குமாரனான நசிகேதஸ் தன்னையாவது தானம்செய்து கடைத்தேரட்டும் என்று எண்ணி 'என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்கள்' என்று இரண்டு மூன்று தாம்

கேட்க, வாஜச்சிரவஸ் கோபங்கொண்டு 'உன்னை மிருத்யுவுக்குக் கொடுக்கிறேன்' என்று கூறிவிட்டார். அவ்விதமே மிருத்யுலகம் சென்று, அவர் ஊரிலில்லாத காலத்தில் அவர் வீட்டில் மூன்று நாள் ஆகாரமில்லாமலிருந்துவிட்டான். யமன் வந்து விசாரித்து, நசிகேதஸ் பட்டினியாயிருந்ததால் தன்னுடைய பிரஜைகள், பசுக்கள், நற்கன்மங்கள் குறைந்துவிட்டதைத் திரும்பியடையக் கருதி, மூன்றுவரங்கள் நசிகேதஸ்ஸுக்குத்தருவதாகச்சொல்லிக் கேட்கச்சொன்னார். அதன்படி முதல் வரத்தால் தன் பிதாவை ஜீவனோடு பார்க்கும்படிக்கும், இரண்டாவது வரத்தால் தன்னுடைய வேள்விகள் வாபீகூபதடாகாதிகள் நாசமடையாதிருத்தலையும் அடைந்தான். மூன்றாவது வரத்தால் மரணமில்லாதிருத்தலைக் கேட்க, அப்போது யமன் நாசிகேதசயனத்தையுபதேசித்தார். நசிகேதஸ் அந்த சயனத்தால் மரணத்தை ஜயித்தான். எவரெவர் நாசிகேதசயனம் செய்கிறார்களோ, அவரவர் மரணமில்லாமல் நித்யமுக்தர்களாகின்றனர். மூன்றாவது வரத்திற்கு யமன் பலவித பரீக்ஷைசெய்து கடைசியில் பிர்ம்மவித்தையை உபதேசித்தார் என்பது ஞானகாண்டத்தின் முடிவு. இங்கு நாசிகேதசயனத்தால் என்பது கர்மகாண்ட ஸ்தோத்திரமும், பரம்பராஸாதனமுமாகும். இந்த பசுபந்தத்திற்கு ரித்விக்குகள் ஆறு, பசு ஒன்று. வபாகிரஹணகாலத்தில், மாஜிஸப்மாஜிஸ்ட்ரேட் ராமாசாஸ்திரிகள் வேதப்பிராமாண்யம் என்பதைப்பற்றி அருமையாய் உபந்யஸித்தார். மேற்கண்ட பசுபந்தம் நடந்தவிடத்திலேயே ஒருவாரம் முன்னும், பின்னும் மாயவரத்தில் தற்காலம் ஜீவன் முக்தர்களாக விளங்கும் வாஸுதேவ பிர்மமேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் திவ்யோபதேசத்தால் ஸோமயாகம் செய்து கிருதார்த்தர்களான, குன்னம், கோதண்டராம தீக்ஷிதரும், நீடூர், கிருஷ்ணமூர்த்தி தீக்ஷிதரும் வருஷபசுபந்தத்தைச் செய்தனர். ஆகையால் யக்ஞரூபியான பகவான் அபயப்பிரதானம் பண்ணுவதற்காகவே ஆங்காங்கு யாகரூபமாகவே விளங்கிவருவதால் சாதுக்களின் நற்காரியம் கெடாது. உலகத்தில் நடக்கும் தீயச்செயல்களைப் புகழ்ந்து சமாசாரப்பத்திரிகைகள் வெளிவருவதால் அதிகமாக அதைப் படிப்போர் ஸ்வல்பஆஸ்திகத்தையும் இழக்க நேரிடுகிறது. நிஷ்காமகர்மமே சிறந்ததெனச் செய்துவரும் நம்முடைய முன்னோர்களுக்கும் முன்னோர்வம்சத்துதித்தவருக்கும், தாம் செய்யும் காரி

யம், வெளியில் வந்துலாவச் சம்மதமிராது. ஸமயத்தை அனுசரித்தும், அங்கு ஆர்த்விஜ்யம் வகிக்கும் பாக்கியம் கிடைக்கப் பெற்றதையும் கொண்டு, சான்றோர் மனம் குளிர இந்நிரூபத்தை எழுத முன்வந்தேன்.

## தென்னாற்காடுஜில்லா பிராம்மணஸபைஏற்பட்டகாலம்.

விபவ-ௐ தை-மீ 6உ ஞாயிற்றுக்கிழமை (20—1—29) மத்திரப்பிராந்திய பிராம்மணஸபை கார்யதர்சி ஸ்ரீமான் வெ.ஸோமதேவசர்மாவால் கோவில்வீரட்டானம் பிராம்மணஸபை ஆண்டு விழா காலத்தில், அங்கு அதைத் தலைமை வகித்த ஹைகோர்ட்டு வக்கீல் N. ஸ்ரீநிவாஸாசார்யார் முதலானவர்களோடு யோசித்து ஏற்படுத்தப்பட்டது.

தலைவர். V. T. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் B.A., B.L.
கார்யதர்சிகள்: V. S. ஸீதாராமய்யர் B.A., L.T.
,, V. ஜயராமஅய்யர் B.A., L.T.,
,, கிருஷ்ணயக்ஞ. V. உமாமகேச்வரசாஸ்திரி.

நோக்கம்:— பிராம்மண்யத்தையும், ஸ்வதர்மத்தையும் காக்க வேலை செய்யப்படும். ——— V. உமாமகேச்வரசாஸ்திரி.

## அனுதாபம்.

16—10—29உ புதன்கிழமை மாலை 5-மணிக்கு கண்டதேவி எனது குருநாதனான ஸ்ரீ காளீஸ்வரசிவாசாரியார் அவர்கள் சிவபதம் அடைந்ததாக சுதேசமித்திரனில் பார்த்ததும் எனக்கு ஆராத்துயரத்தையும், அளவறந்த கவலையையும் உண்டாக்கிவிட்டது. அவருடைய ஸமஸ்கிருதபாஷையிலும், சிவாகமத்திலும் மிகுந்த தேர்ச்சியையும்; மாணாக்கர்களுக்கு கற்பிக்கும் போதனா சக்தியையும், எந்தமாணாக்கர்களும் எக்காலத்திலும் மறக்கற்பாலதன்று. தற்காலம் நம் ஹிந்துக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் தீண்டாமை ஒழித்தல் என்பதால் ஜாதிவித்யாஸமின்றி ஆலயசத்தியாக்கிரகம் முதலிய அநேகவித விதண்டாவாத குழப்பத்தை சுருதி யுக்தி அனுபவத்தோடு கண்டித்து யதார்தத்தை நிலைநாட்டுவார்களென்று நம்பியிருந்ததில் அன்னவருடைய அகாலமரணமானது நம் சைவசமயிகள் அனைவரின் துர்பாக்கியமே.

அவருடைய நிர்மலமான ஆன்மாவை என்றும் நீங்காது சாயுஜ்யபதவியில் சேர்த்துக்கொள்ளவேணுமாய் சாக்ஷாத் ஸ்ரீபசுபதியை மிகுந்த அனுதாபத்தோடு பிரார்த்திக்கிறேன்.

முத்துசாமி, சிஷ்யன்.